**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 12**

**For all undergraduate course**

**Syllabus for Non Major ElectiveUnder CBCS**

**For those who joined the course from the Academic year 2016,2017,2018**

**(45th SCAA meeting held on 09.02.2017)**

அனைத்து இளநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்குரியது

**பொது விருப்பத் தேர்வு முறை (Choice Based Credit System) அடிப்படையில் தமிழ் மொழியை அறியாத மாணவர்க்குரிய துறை சாரா விருப்பப் (ஆறாம் வகுப்பு நிலை) பாடத்திட்டம், மூன்றாம், நான்காம், பருவங்களுக்கு உரியது.**

**தமிழ்மொழியை அறியாத மாணவர்க்குரிய பாடத்திட்டம்.**

**மூன்றாம் பருவம் - அறிமுகத்தமிழ் - தாள் 1**

**நான்காம் பருவம் - அறிமுகத்தமிழ் - தாள் 2**

இவ்விரு தாள்களும் தமிழ் மொழியைப் பயிலாத மாணவர்களுக்குப் பொது விருப்பப்பாடத் தேர்வு முறைப்படி (Choice Based Credit System) துறைசாரா விருப்பப்பாடத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ் மொழியினைக் கற்கும் வகையில் எளிமையுடன் அமைக்கப்பட்டுள்ளது. பிறமொழியினைத் தாய்மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவருக்குத் தமிழ் மொழியினை அறிமுகப்படுத்தும் வகையில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் எழுதும் திறனும், பேசும் திறனும் சிறப்பாக அமைய கையெழுத்துப் பயிற்சியும், வாய்மொழிப் பயிற்சியும் இன்றியமையாதனவாகக் கருதப்படுவதால், அப்பயிற்சி பெறும் வகையில் பாடங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவரின் அறிவு மேம்படும் வகையிலும் தமிழ்மொழியைக் கற்கத் தூண்டும் வகையிலும் மொழித்திறன் பயிற்சியும் அமைந்துள்ளது.

இப்பாடத்திட்டக் குறிப்பேடு வெளிவருவதற்கு வழிகாட்டிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கி.பாஸ்கர் அவர்களுக்கும் பதிவாளர் முனைவர் அ.ஜாண் டி பிரிட்டோ அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடத்திட்டக் குழுவினர்

## அறிமுகத்தமிழ் -தாள் - 1

**பொருளடக்கம்**

**கடவுள் வாழ்த்து**

எங்கும் மனிதர் உனைத்தேடி
இரவும் பகலும் அலைகின்றனார்
எங்கும் உள்ளது உன் வடிவாம்
எனினும் குருடர் காண்பாரோ?
எங்கும் எழுவது உன் குரலாம்:
எனினும் செவிடர் கேட்பாரோ?
எங்கும் என்றும் எவ்வுயிரும்
யாவு மான இறையவனே!

-கவிமணி

## அலகு– 1 எழுத்துக்கள்

எழுத்துக்கள் அறிமுகம் -- பிறப்பிடம், எண்ணிக்கை, எழுத்துப்புணர்ச்சி, நடைமுறையில் காணப்படும் வடமொழி எழுத்துக்கள்.

அ) எழுத்துக்களின் அறிமுகம் --பிறப்பிடம்

உயிர் எழுத்துக்கள் (12)

அ, ஆ, இ,ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

உயிர் குறில் (5)

அ, இ, உ, எ, ஒ

உயிர் நெடில் (7)

ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

மெய் எழுத்துக்கள் (18)

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

வல்லினம் : (6) - க், ச், ட், த், ப், ற்

மெல்லினம் : (6) – ங்,ஞ், ண், ந், ம், ன்.

இடையினம் : (6) – ய், ர், ல், வ், ழ், ள்

எழுத்துக்கள் பிறக்கும் இடங்களைத் தெரிந்து கொள்க (ஆசிரியர் பயிற்சியளித்தல்)

## ஆ) தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | 12 |
| மெய் எழுத்துக்கள் | - | 18 |
| உயிர் மெய் | - | 216 |
| ஆய்தம் | - | 1 |
| மொத்தம் | - | 247 |

## இ) எழுத்துக்களின் புணர்ச்சி

(உயிர்+மெய் = உயிர்மெய் - 216)

| க் + அ = க | க் +ஆ= கா | க் +இ= கி | க் +ஈ= கீ |
|---|---|---|---|
| ங் + அ =ங | ங் +ஆ=ஙா | ங் +இ=ஙி | ங் +ஈ=ஙீ |
| ச் + அ =ச | ச் +ஆ=சா | ச் +இ=சி | ச் +ஈ=சீ |
| ஞ் + அ =ஞ | ஞ் +ஆ=ஞா | ஞ் +இ=ஞி | ஞ் +ஈ=ஞீ |
| ட் + அ =ட | ட் +ஆ=டா | ட் + அ =டி | ட் +ஈ=டீ |
| ண் + அ =ண | ண் +ஆ=ணா | ண் +இ=ணி | ண் +ஈ=ணீ |
| த் + அ =த | த் +ஆ=தா | த் +இ=தி | த் +ஈ=தீ |
| ந் + அ =ந | ந் +ஆ=நா | ந் +இ=நி | ந் +ஈ=நீ |
| ப + அ =ப | ப +ஆ=பா | ப +இ=பி | ப +ஈ=பீ |
| ம் + அ =ம | ம் +ஆ=மா | ம் +இ=மி | ம் +ஈ=மீ |
| ய் + அ =ய | ய் +ஆ=யா | ய் +இ=யி | ய் +ஈ=யீ |
| ர் + அ =ர | ர் +ஆ=ரா | ர் +இ=ரி | ர் +ஈ=ரீ |
| ல் + அ =ல | ல் +ஆ=லா | ல் +இ=லி | ல் +ஈ=லீ |
| வ் + அ =வ | வ் +ஆ=வா | வ் +இ=வி | வ் +ஈ=வீ |
| ழ் + அ =ழ | ழ் +ஆ=ழா | ழ் +இ=ழி | ழ் +ஈ=ழீ |
| ள் + அ =ள | ள் +ஆ=ளா | ள் +இ=ளி | ள் +ஈ=ளீ |
| ற் + அ =ற | ற் +ஆ=றா | ற் +இ=றி | ற் +ஈ=றீ |
| ன் + அ =ன | ன் +ஆ=னா | ன் +இ=னி | ன் +ஈ=னீ |

| | | | |
|---|---|---|---|
| க் + உ = கு | க் +ஊ=கூ | க் + எ = கெ | க் + ஏ = கே |
| ங் +உ=ஙு | ங் +ஊ=ஙு | ங் +எ=ஙெ | ங் +ஏ=ஙே |
| ச் +உ=சு | ச் +ஊ=சூ | ச் +எ=செ | ச் +ஏ=சே |
| ஞ் +உ=ஞு | ஞ் +ஊ=ஞு | ஞ் +எ=ஞெ | ஞ் +ஏ=ஞே |
| ட் +உ=டு | ட் +ஊ=டூ | ட் +எ=டெ | ட் +ஏ=டே |
| ண் +உ=ணு | ண் +ஊ=ணு | ண் +எ=ணெ | ண் +ஏ=ணே |
| த் +உ=து | த் +ஊ=து | த் +எ=தெ | த் +ஏ=தே |
| ந் +உ=நு | ந் +ஊ=நு | ந் +எ=நெ | ந் +எ=நே |
| ப் +உ=பு | ப் +ஊ=பூ | ப் +எ=பெ | ப் +ஏ=பே |
| ம் +உ=மு | ம் +ஊ=மூ | ம் +எ=மெ | ம் +ஏ=மே |
| ய் +உ=யு | ய் +ஊ=யூ | ய் +எ=யெ | ய் +ஏ=யே |
| ர் +உ=ரு | ர் +ஊ=ரூ | ர் +எ=ரெ | ர் +ஏ=ரே |
| ல் +உ=லு | ல் +ஊ=லூ | ல் +எ=லெ | ல் +ஏ=லே |
| வ் +உ=வு | வ் +ஊ=வூ | வ் +எ=வெ | வ் +ஏ=வே |
| ழ் +உ=ழு | ழ் +ஊ=ழூ | ழ் +எ=ழெ | ழ் +ஏ=ழே |
| ள் +உ=ளு | ள் +ஊ=ளு | ள் +எ=ளெ | ள் +ஏ=ளே |
| ற் +உ=று | ற் +ஊ=றூ | ற் +எ=றெ | ற் +ஏ=றே |
| ன் +உ=னு | ன் +ஊ=னூ | ன் +எ=னெ | ன் +ஏ=னே |

| | | | |
|---|---|---|---|
| க் + ஐ = கை | க் +ஒ=கொ | க் + ஓ = கோ | க் + ஔ = கௌ |
| ங் +ஐ=ஙை | ங் +ஒ=ஙொ | ங் +ஓ=ஙோ | ங் +ஔ=ஙௌ |
| ச் +ஐ=சை | ச் +ஒ=சொ | ச் +ஓ=சோ | ச் +ஔ=சௌ |
| ஞ் +ஐ=ஞை | ஞ் +ஒ=ஞொ | ஞ் +ஓ=ஞோ | ஞ் +ஔ=ஞௌ |
| ட் +ஐ=டை | ட் +ஒ=டொ | ட் +ஓ=டோ | ட் +ஔ=டௌ |
| ண் +ஐ=ணை | ண் +ஒ=ணொ | ண் +ஓ=ணோ | ண் +ஔ=ணௌ |
| த் +ஐ=தை | த் +ஒ=தொ | த் +ஓ=தோ | த் +ஔ=தௌ |
| ந் +ஐ=நை | ந் +ஒ=நொ | ந் +ஓ=நோ | ந் +ஔ=நௌ |
| ப் +ஐ=பை | ப் +ஒ=பொ | ப் +ஓ=போ | ப் +ஔ=பௌ |
| ம் +ஐ=மை | ம் +ஒ=மொ | ம் +ஓ=மோ | ம் +ஔ=மௌ |
| ய் +ஐ=யை | ய் +ஒ=யொ | ய் +ஓ=யோ | ய் +ஔ=யௌ |
| ர் +ஐ=ரை | ர் +ஒ=ரொ | ர் +ஓ=ரோ | ர் +ஔ=ரௌ |
| ல் +ஐ=லை | ல் +ஒ=லொ | ல் +ஓ=லோ | ல் +ஔ=லௌ |
| வ் +ஐ=வை | வ் +ஒ=வொ | வ் +ஓ=வோ | வ் +ஔ=வௌ |
| ழ் +ஐ=ழை | ழ் +ஒ=ழொ | ழ் +ஓ=ழோ | ழ் +ஔ=ழௌ |
| ள் +ஐ=ளை | ள் +ஒ=ளொ | ள் +ஓ=ளோ | ள் +ஔ=ளௌ |
| ற் +ஐ=றை | ற் +ஒ=றொ | ற் +ஓ=றோ | ற் +ஔ=றௌ |
| ன் +ஐ=னை | ன் +ஒ=னொ | ன் +ஓ=னோ | ன் +ஔ=னௌ |

உயிர் மெய் எழுத்துக்கள் (216)

உயிர் எழுத்துக்கள் (12) x மெய்எழுத்துக்கள் (18) =216

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | லு | லூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | கா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | சா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

ஆய்த எழுத்து

ஃ

நடைமுறையில் காணப்படும் வடமொழி எழுத்துக்கள் (கிரந்த எழுத்துக்கள்)

ஜ, ஷ, ஸ, ஹ,க்ஷ,ஸ்ரீ

கீழ்க்காணும் எழுத்துக்களில் உயிர் எழுத்துக்களை வட்டமிடுக :-

க, மா, ஃ, இ, எ, கெ, த, கௌ, அ, ஊ

கீழ்க்காணும் எழுத்துக்களில் மெய் எழுத்துக்களை வட்டமிடுக

ஆ,ச், ஏ,ந், ண்,ஈ

கீழ்க்காணும் எழுத்துக்களில் உயிர்மெய் எழுத்துக்களை வட்டமிடுக

ஐ,உ, ம, த, எ, இ, கௌ

## அலகு:2

அ) சொல் ஆ) தொடர்

இ) வாக்கியம்

அ) சொல்

அம்மா, அணில், அப்பம்,

ஆடு, ஆலை, ஆலயம்

இலை, இஞ்சி, இனிமை

ஈகை,ஈரம்,ஈட்டி

உப்பு, உதவி, உலகம்

ஊதல், ஊக்கம், ஊஞ்சல்

எள், எறும்பு, எண்ணெய்

ஏடு, ஏணி, ஏற்றம்

ஐவர்,ஐயம், ஐப்பசி

ஒன்று, ஒன்பது. ஒட்டகம்

ஓமம்,ஓவியம், ஓதுதல்

ஔவை, ஔடதம்

பக்கம், நுங்கு, பச்சிலை, மஞ்சள், சட்டம், தண்ணீர், நத்தை, பந்து, பருப்பு, பம்பரம், வாய்மை, தேர், வெல்லம், செவ்வாய், வள்ளல், வாழ்வு, வற்றல், இன்பம், அ∴து, இ∴து.

1. பெயர் சொற்கள்

கண்ணன், இராமன், ...............................

பருந்து, கழுகு, ............................

மான், புலி, சிங்கம், .........................

மரம், கிளை, பூ, காய்,..................

புத்தகம், நாற்காலி, மின்விசிறி, ................

கண், காது, மூக்கு, கை, கால், ................

2. வினைச் சொற்கள்

செய்தான், வந்தான், தின்றான், பார்த்தார், படித்தார்

3. உறவு முறை பெயர்கள்

அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தங்கை, தம்பி, மாமா

4. தமிழ்ச் சொற்கள் பயிற்சி

   குழந்தை, பள்ளிக்கூடம்,ஊர், கல்லூரி, மருத்துவமனை

5. அறிந்து கொள்க :

   பொருட் பெயர்கள், தொழிற்பெயர்கள், துறைப்பெயர்கள்

6. நடைமுறை வடமொழி பெயர்கள்: (அறிந்து கொள்க)

   புஷ்பம், ஜலம், ஜாடி, ஜுலை, விஷம், ஸ்ரீதேவி

ஆ) தொடர்

1. பெயருக்கேற்ற வினை

| | |
|---|---|
| அப்பம் தின் | சந்தனம் பூசு |
| கஞ்சி குடி | சோறு உண் |
| இலை பறி | பாடல் இயற்று |
| ஏர் உழு | தென்றல் வீசும் |
| கற்பூரம் கொளுத்து | நீர் பருகு |
| கல் உடை | பாட்டு பாடு |
| கிளையை ஒடி | நீர் பாய்ச்சு |
| களை பறி | பூ கொய் |
| காய்களை அரி | நெல்லைக் குற்று |
| மரம் வெட்டு | விறகு பிள |
| நூல் எழுது | படம் வரை |
| விடை எழுது | அம்பு எய் |

**இ) வாக்கியம்**

கண்ணன் கடிதம் எழுதினான்
சீதா உடற்பயிற்சி செய்தாள்
மல்லிகா பாடல் பாடினாள்
இராமன் கீழே இறங்கினான்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்விளக்கம் அறிந்து கொள்க

சில இனிய வாக்கியங்கள் (அறிந்துகொள்க, உச்சரித்துப்பழகு)

1. பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் தவிக்கிறார்கள்
2. அன்று வேம்பாக இருந்த கருத்துக்கள், இன்று கரும்பாக இனிக்கின்றன
3. காலச் சக்கரம் சுழன்றது உலகநிலை மாறியது
4. தமிழிலக்கியம் காதலும் வீரமும் கலந்து மணம் பரப்பும் சோலையாகும்.
5. திரு.வி.க. தமிழ் வளர்சிக்குத் தூண்டு கோலாகவும் ஊன்று கோலாகவும் இருந்தார்.

## அலகு– 3

அ) வாய்மொழிப் பயிற்சி

ஆ) இனிய சொற்றொடரும், மரபுத் தொடரும்

இ) உவமைகள்

ஈ) பழமொழிகள்

உ) இனிய செய்யுள் வரிகள்

ஊ) பறவை விலங்கினங்களின் ஒலிகள், அவற்றின் இளமைப் பெயர்கள்

எ) மாணவர் ஆசிரியர் உரையாடல்

ஏ) ஒரு பொருள் குறித்துப் பேசுதல்.

**அ) வாய்மொழிப் பயிற்சி**

அலை, ஆலை

இலை, இழை, இளைஞன்

உணவு, உணர்வு, உன்னுடையது

பன்னாடு, பனம்பழம், பண்பாடு

தேர்வு, தேற்றல், தேர்தல்

மரம், மறம்

வலம், வழக்கம், வளம்

வல்லவன், வாழ்க்கை, வள்ளல்

**ஆ) இனிய சொற்றொடரும் - மரபுத் தொடரும்**

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி

ஆக்கமும் ஊக்கமும்

ஆயிரங்காலத்துப் பயிர்

ஆவதும் அழிவதும்

இமயம் முதல் குமரி வரை

இணை பிரியாத நண்பர்கள்

ஏட்டுச் சுரைக்காய்

காலை முதல் மாலை வரை

காலத்துக் கேற்ற கோலம்

கைகட்டி வாய் பொத்தி நின்றான்

## இ) உவமைகள்

அத்தி பூத்தாற் போல

இரும்பை இழுக்கும் காந்தம் போல

உயிரும் உடம்பும் போல

ஊசியும் சரடும் போல

எலியும் பூனையும் போல

கடன் பட்டான் நெஞ்சம் போல

காட்டுத் தீ போல

கிணற்றுத் தவளை போல

குட்டி போட்ட பூனையைப் போல

சூரியனைக் கண்ட பனி போல

## ஈ) பழமொழிகள்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

ஆழம் தெரியாமல் காலை விடாதே

இளமையில் கல்வி முதுமையில் காக்கும்

ஈயிடம் நோயிடம்

உப்பிட்டவரை உள்ளளவும் நினை

உழைப்பே உயர்வு தரும்

எறும்பு ஊரக் கல்லும் தேயும்

ஏட்டுச் சுரைக்காய் கறி சமைக்க உதவாது

ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்

சுத்தம் சுகம் தரும்

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## உ) இனிய செய்யுள் வரிகள்

1. ”செந்ததமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்தேன்
   வந்து பாயுது காதினிலே”
2. ”யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
   இனிதாவது எங்கும் காணோம்.”
3. ”உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”

4. ”தீதும் நன்றும் பிறர்தர வாரா!”

5. ”ஒன்றே குலம் ஒருவனே தேவன்”

**ஊ) ஒலிகளும் - இளமைப் பெயர்களும்**

1. **ஒலிகள்**

| **பறவை ஒலிகள்** | **விலங்குகளின் ஒலிகள்** |
|---|---|
| ஆந்தை அலறும் | கழுதை கத்தும் |
| காக்கை கரையும் | குதிரை கனைக்கும் |
| கிளி பேசும் | சிங்கம் முழங்கும் |
| மயில் அகவும் | நரி ஊளையிடும் |
| குருவி கீச்சிடும் | நாய் குரைக்கும் |
| கோழி கொக்கரிக்கும் | புலி உறுமும் |
| சேவல் கூவும் | யானை பிளிறும் |
| கூகை குழறும் | ஆடு கத்தும் |
| புறா குனுகும் | எலி கீச்சிடும் |
| வண்டு முரலும் | தவளை கத்தும் |
| | குரங்கு அலம்பும் |
| | பூனை சீறும் |
| | |

2. **பறவை, விலங்குகளின் இளமைப் பெயர்கள்**

கோழிக் குஞ்சு

குருவிக் குஞ்சு

குதிரைக் குட்டி

கீரிப் பிள்ளை

பசுங்கன்று

ஆட்டுக் குட்டி

சிங்கக் குருளை

மான் கன்று

நாய்க் குட்டி

புலிப் பறழ்

**எ)மாணவர் ஆசிரியர் உரையாடல்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | நீங்கள் விரும்பும் கவிஞர் ஒருவரின் பெயரைக் கூறுங்கள் |
| மாணவர்கள் | : | கவிஞர் வைரமுத்து அவர்களை எங்களுக்கு மிகவும் பிடிக்கும் |
| ஆசிரியர் | : | அவருடைய கவிதைகளுள் உங்களைக் கவர்ந்த கவிதை எது? |
| மாணவர்கள் | : | எட்டுக்குள்ள வாழ்க்கை இருக்கு |
| ஆசிரியர் | : | அவரது கவிதையில் உங்களுக்குப் பிடித்தது கருத்தாழமா? அல்லது சொல்லாட்சியா? |
| மாணவர்கள் | : | இரண்டுமே எங்களுக்குப் பிடிக்கும் |

**ஏ) ஒரு பொருள் குறித்துப் பேசுதல்:**

1. மழை
2. நிலம்
3. காடு
4. கல்விக்கூடம்
5. நூலகம்

## அலகு– 4

## எண்கள், நாட்கள், மாதங்கள்

### i)எண்கள்

ஒன்று முதல் - ஐம்பது வரை

| | | |
|---|---|---|
| 1. | ஒன்று | One |
| 2. | இரண்டு | Two |
| 3. | மூன்று | Three |
| 4. | நான்கு | Four |
| 5. | ஐந்து | Five |
| 6. | ஆறு | Six |
| 7. | ஏழு | Seven |
| 8. | எட்டு | Eight |
| 9. | ஒன்பது | Nine |
| 10. | பத்து | Ten |
| 11. | பதினொன்று | Eleven |
| 12. | பன்னிரண்டு | Twelve |
| 13. | பதிமூன்று | Thirteen |
| 14. | பதினான்கு | Fourteen |
| 15. | பதினைந்து | Fifteen |
| 16. | பதினாறு | Sixteen |
| 17. | பதினேழு | Seventeen |
| 18. | பதினெட்டு | Eighteen |
| 19. | பத்தொன்பது | Nineteen |
| 20. | இருபது | Twenty |
| 21. | இருபத்தொன்று | Twenty One |
| 22. | இருபத்திரண்டு | Twenty Two |
| 23. | இருபத்து மூன்று | Twenty Three |
| 24. | இருபத்து நான்கு | Twenty Four |
| 25. | இருபத்தைந்து | Twenty Five |
| 26. | இருபத்தாறு | Twenty Six |
| 27. | இருபத்தேழு | Twenty Seven |
| 28. | இருபத்தெட்டு | Twenty Eight |
| 29. | இருபத்தொன்பது | Twenty Nine |
| 30. | முப்பது | Thirty |
| 31. | முப்பத்தொன்று | Thirty One |
| 32. | முப்பத்திரண்டு | Thirty Two |
| 33. | முப்பத்து மூன்று | Thirty Three |
| 34. | முப்பத்து நான்கு | Thirty Four |

| | | |
|---|---|---|
| 35. | முப்பத்து ஐந்து | Thirty Five |
| 36. | முப்பத்தாறு | Thirty Six |
| 37. | முப்பத்தேழு | Thirty Seven |
| 38. | முப்பத்தெட்டு | Thirty Eight |
| 39. | முப்பத்தொன்பது | Thirty Nine |
| 40. | நாற்பது | Forty |
| 41. | நாற்பத்தொன்று | Forty One |
| 42. | நாற்பத்திரண்டு | Forty Two |
| 43. | நாற்பத்து மூன்று | Forty Three |
| 44. | நாற்பத்து நான்கு | Forty Four |
| 45. | நாற்பத்தைந்து | Forty Five |
| 46. | நாற்பத்தாறு | Forty Six |
| 47. | நாற்பத்தேழு | Forty Seven |
| 48. | நாற்பத்தெட்டு | Forty Eight |
| 49. | நாற்பத்தொன்பது | Forty Nine |
| 50. | ஐம்பது | Fifty |

**2. பத்து இலக்க எண்கள்**

10 - பத்து - Ten

20 - இருபது - Twenty

30 - முப்பது - Thirty

40 - நாற்பது - Forty

50 - ஐம்பது - Fifty

60 - அறுபது - Sixty

70 - எழுபது - Seventy

80 - எண்பது - Eighty

90 - தொண்ணூறு - Ninty

**3. 100 இலக்க எண்கள்**

100 - நூறு - Hundred

200 - இருநூறு - Two hundred

300 - முந்நூறு - Three Hundred

400 - நாநூறு - Fourhundred

| | | | | |
|---|---|---|---|---|
| 500 | - | ஐநூறு | - | Five hundred |
| 600 | - | அறுநூறு | - | Six Hundred |
| 700 | - | எழுநூறு | - | Seven Hundred |
| 800 | - | எண்ணூறு | - | Eight Hundred |
| 900 | - | தொள்ளாயிரம் | - | Nine Hundred |

**4. 1000 இலக்க எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1000 | - | ஆயிரம் | - | Thousand |
| 2000 | - | இரண்டாயிரம் | - | Two thousand |
| 3000 | - | மூவாயிரம் | - | Three thousand |
| 4000 | - | நான்காயிரம் | - | Four Thousand |
| 5000 | - | ஐந்தாயிரம் | - | Five Thousand |
| 6000 | - | ஆறாயிரம் | - | Six Thousand |
| 7000 | - | ஏழாயிரம் | - | Seven Thousand |
| 8000 | - | எட்டாயிரம் | - | Eight Thousand |
| 9000 | - | ஒன்பதாயிரம் | - | Nine thousand |

**ii)நாட்கள்**

| | | |
|---|---|---|
| ஞாயிறு | - | Sunday |
| திங்கள் | - | Monday |
| செவ்வாய் | - | Tuesday |
| புதன் | - | Wednesday |
| வியாழன் | - | Thursday |
| வெள்ளி | - | Friday |
| சனி | - | Saturday |

**இ) 1.தமிழ் மாதங்கள்**

சித்திரை

வைகாசி

ஆனி

ஆடி

ஆவணி

புரட்டாசி

ஐப்பசி

கார்த்திகை

மார்கழி

தை

மாசி

பங்குனி

**2. ஆங்கில மாதங்கள்**

| | | |
|---|---|---|
| ஜனவரி | - | January |
| பிப்ரவரி | - | February |
| மார்ச் | - | March |
| ஏப்ரல் | - | April |
| மே | - | May |
| ஜுன் | - | June |
| ஜுலை | - | July |
| ஆகஸ்ட் | - | August |
| செப்டம்பர் | - | September |
| அக்டோபர் | - | October |
| நவம்பர் | - | November |
| டிசம்பர் | - | December |

## அலகு– 5

அ) கையெழுத்துப் பயிற்சி கொடுத்தல்

ஆ) சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்களை வாசித்தல்

இ) படங்களைக் காட்டிப் பெயர் சொல்ல வைத்தல் மற்றும் கருத்துப்படங்களைப் பார்த்து சூழல்களைப் பேச வைத்தல்

ஈ) வாக்கியம் அமைத்தல்

உ) மொழித்திறன் பயிற்சி

ஊ) கையெழுத்துப் பயிற்சி

எ) வாய்மொழிப் பயிற்சி

ஏ) சரியான வாக்கியமாக மாற்றுதல்

ஐ) இனமில்லாதவற்றை எடுத்து எழுதுதல்

ஒ) விடுபட்ட எழுத்துக்களை இணைத்தல்

ஓ) ஏதேனும் ஒரு தலைப்பில் ஐந்து பெயர்களை எழுத வைத்தல் (வினாவுக்குரிய விடையளித்தல்)

ஔ) தன் விவரப்பட்டியல் தயாரித்தல்

**ஐ. இனமில்லாதவற்றை எடுத்து எழுதுக (பயிற்சியளித்தல்)**

1. மருத்துவர்,ஆசிரியர், வைகாசி, நடத்துனர்
   விடை : வைகாசி
2. ரோஜா, மல்லிகை, செவ்வந்தி, மருக்கொழுந்து
   விடை : மருக்கொழுந்து
3. அம்மா, அண்ணன், புறா, அப்பா
   விடை : புறா
4. ஆடு, மாடு, கோழி,மனிதன், பூனை, யானை
   விடை : மனிதன்
5. குதிரை, நாய் ஒட்டகம், மான், கிளி, வேங்கை
   விடை : கிளி
6. மா, பலா, தென்னை, எறும்பு, கம்பு, வாழை
   விடை : எறும்பு
7. முல்லை, மல்லிகை, கனகாம்பரம், கரும்பு, அரளி,
   விடை : கரும்பு
8. கறுப்பு, மஞ்சள், சாமந்தி, நீலம், சிவப்பு
   விடை : சாமந்தி

**ஓ) விடுபட்ட எழுத்துக்களை இணைத்தல்**

1. கு__ றாலக்கு__வ__சி (குற்றாலக்குறவஞ்சி)
2. __ழ முதி__ __லை (பழமுதிர்சோலை)
3. வி__ மீ__ (விண்மீன்)
4. வெ__ல் (வெயில்)
5. பா__ (பாவை)

**ஓ) ஏதேனும் ஒரு தலைப்பில் ஐந்து பெயர்களை எழுத வைத்தல் (பயிற்சியளித்தல்)**

**(வினாவுக்குரிய விடையளித்தல்)**

அ) விலங்கின் பெயர்கள் :

1. காட்டு விலங்குகள்
2. வீட்டு விலங்குகள்

ஆ) பறவைகளின் பெயர்கள்

இ) நிறங்கள்

ஈ) உடல் உறுப்புக்கள்

(சான்று: உடல் உறுப்புக்களில் ஐந்தினை எழுதுக?

கை, கண், காது, மூக்கு, வாய் )

உ) பூக்கள்

ஊ) வீட்டு உபயோகப் பொருட்களின் பெயர்கள்

எ) மரங்களின் பெயர்கள்

**ஔ) தன் விவரக்குறிப்பு (பயிற்சியளித்தல்)**

1. பெயர் :
2. பிறந்த நாள் மற்றும் வயது :
3. பாலினம் :
4. தந்தையின் பெயர்/ கணவர் பெயர் :
5. நிரந்தர முகவரி : வீட்டு எண் :

தெருவின் பெயர் :

ஊர் :

மாவட்டம் :

அஞ்சல் குறியீட்டு எண் :

6. கல்வித் தகுதி :

7. தாய் மொழி :

8. எழுதப்படிக்கத் தெரிந்த மொழிகள் :

9. தொலைபேசி எண் :

10. மின்னஞ்சல் குறியீடு :

நாள் : கையொப்பம்

இடம் :

**குறிப்பு:**

தொடக்க நிலை மாணவர்களுக்குப் பல்வேறு பொருட்களைக் குறிக்கும் படங்களைக் கொண்ட வரைபடங்களைக் காண்பித்து; அவற்றில் உள்ள பொருள்களின் பெயர்களை வரிசையாக எழுத வைத்து, சொற்களையும், பொருளையும் கண்டறிந்து எழுதும் மொழிப்பயிற்சியை அளிக்கலாம். பேச்சு, படிப்பு, எழுத்து வழி அவர்களின் முன்னேற்றத்தைச் சோதித்து அறியலாம்.

## அலகு– 1 செய்யுள் பகுதி

1. **கடவுள் வாழ்த்து**

அ) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

ஆ) கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

இ) மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

2. **கல்வி:**

ஈ) கற்க கசடுஅறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

3. **அறம்**

உ) ஈன்றாள் பசிகண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

-திருவள்ளுவர்

4. **ஆத்திசூடி**

1. அறம் செய்ய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. ஊக்கமது கைவிடேல்
6. எண் எழுத்து இகழேல்
7. தந்தை தாய்ப்பேன்
8. நன்றி மறவேல்
9. நூல் பல கல்
10. நேர்பட ஒழுகு

-ஔவையார்.

**5.ஓடி விளையாடு பாப்பா**

ஓடி விளையாடு பாப்பா
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா— ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை யெழுந்தவுடன் படிப்பு — பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு — என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்
வாழும் முறைமையடி பாப்பா

- பாரதியார்

**6.** பசுவும் கன்றும் பாடல்

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு — அங்கே
துள்ளிக்குதிக்குது
கன்றுக்குட்டி

அம்மா என்குது
வெள்ளைப்பசு — உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி

நாவால் நக்குது
வெள்ளைப்பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி

முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு - மடி

முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

**குறிப்பு:- மனப்பாடப்பகுதி**

1. கடவுள் வாழ்த்து
2. கல்வி
3. அறம்
4. ஆத்திச்சூடி

## அலகு- 2

**கதை வாசித்து கதை சொல்லல்**

**1. பணிமிருந்தும் பட்டினி :**

கிருஷ்ண தேவராயர் நாட்டின் நலன் கருதி வலிமையான குதிரைப் படையை அமைக்க எண்ணினார். ஆயிரம் குதிரைக் குட்டிகளை வரவழைத்தார். வீட்டுக்கொரு குதிரைக் குட்டியும் பணமும் கொடுத்தார். அவற்றை நல்ல முறையில் வளர்க்க ஆணையிட்டார்.

தெனாலிராமன் தனக்குக் கொடுக்கப்பட்ட குதிரைக்குட்டியை ஓர் அறைக்குள் அடைத்து வைத்தான். உணவு கொடுப்பதற்கு மட்டும் சுவரில் ஒரு துவாரம் அமைத்திருந்தான். அதன் வழியாகக் குதிரைக்குக் காய்ந்த புல்லை மட்டுமே கொடுத்து வந்தான்.

சில மாதங்கள் சென்றன. தெனாலிராமனைத் தவிர அனைவரும் தங்களது குதிரைகளுடன் அரண்மனைக்கு வந்தனர். குதிரைகள் கொழு கொழுவென இருந்தன. அவற்றைக் கண்ட மன்னர் பெருமகிழ்வு கொண்டார்.

தெனாலிராமனைப் பார்த்து நீ மட்டும் குதிரையை ஏன் அழைத்து வரவில்லை? என்று கேட்டார்.

“அரசே! அந்தப் பொல்லாத குதிரையை என்னால் பிடித்து வர இயலவில்லை. குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். பிடித்து வருகிறோம்” என்று தெனாலிராமன் கூறினான்.

தெனாலிராமன்,குதிரை இருந்த அறையைப் படைத்தலைவருக்குக் காட்டினான். படைத்தலைவர் துவாரத்தின் வழியே எட்டிப் பார்த்தார்.குதிரை அவரது தாடியைக் காய்ந்த புல்லென எண்ணி, வாயால் கவ்வி இழுத்தது.

வலி தாங்க முடியாமல் படைத்தலைவர் அலறினார். உடன் வந்திருந்த காவலர்கள் மிகவும் சிரமபட்டு அவரை குதிரையிடமிருந்து விடுவித்தனர். பிறகு சுவரை இடித்துக் குதிரையை வெளியே கொண்டு வந்தனர்.

எலும்பும், தோலுமாய் இருந்த குதிரையை அரண்மனைக்குக் கொண்டு சென்றனர். குதிரையைக் கண்ட மன்னர் ஆத்திரம் அடைந்தார்.

குதிரை ஏன் இப்படி உள்ளது? எனத் தெனாலிராமனிடம் கேட்டார்.

மன்னா! காய்ந்த புல்லைத் தின்று வளர்ந்த போதே இக்குதிரை படைத்தலைவரைப் படாதபாடு படுத்திவிட்டது. நன்றாகத் தீனி போட்டிருந்தால் என்ன ஆகும்? என்றான் தெனாலிராமன்.

கோபமடைந்த மன்னர் குதிரையை வளர்க்க உன்னிடம் கொடுத்த பணத்தை என்ன செய்தாய்? என்று கேட்டார்.

அரசே! உங்கள் ஆணைக்குப் பயந்து குடிமக்கள் தங்கள் பணத்தையும் செலவுசெய்து குதிரையை வளர்த்தனர். அதனால் குதிரைகள் கொழு கொழுவென வளர்ந்தன. ஆனால் பட்டினி கிடந்ததால் மக்கள் இளைத்துப் போய்விட்டனர்". எனப் பதில் கூறினான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட கிருஷ்ணதேவராயர் தம் தவற்றை உணர்ந்து வருந்தினார்.

**2. அறிவால் வெல்லுவேன் :**

ஓர் அழகிய மலை.அதன் அடிவாரத்தில் மலை ஆடுகள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அதில் குறும்புகார ஆட்டுக்குட்டி ஒன்று இருந்தது. அது தன் தோழர்களுடன் மலையில் ஏறும்: அங்குள்ள காட்டில் சுற்றித் திரியும்.

தாய் ஆடு தன் குட்டியைப் பற்றி எப்போதும் கவலைப்படும். ஏன் தெரியுமா? அந்தக் காட்டில் புலிகளும் வசித்து வந்தன. தாய் ஆடு காட்டில் விளையாடப் போகும் தன் குட்டியிடம் "இருபக்கங்களையும் பார்த்துக் கவனமாகச் செல். காட்டில் புலியின் வாசம் வருகிறதா?என்று முகர்ந்து பார்.
அருகில் ஏதாவது சலசலப்புக் கேட்கிறதா? கூர்ந்து கவனி : அபாயம் என்று தெரிந்தால் முதலில் குரங்குகள் ஒலி எழுப்பும்: உடனே மான்கள் பயந்து ஓடும்: மிக அருகில் புலி இருந்தால், அப்பகுதியில் ஒருவித அமைதி நிலவும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்." என்று அறிவுரை கூறும்

அதற்கு ஆட்டுக்குட்டியோ
அழகு மலைக்குச் செல்லுவேன்
ஆடிப் பாடித் துள்ளுவேன்
அருகில் புலியே வந்தாலும் - என்
அறிவால் அதனை வெல்லுவேன்” என்று துணிவுடன் பதில் கூறும்,

ஒரு நாள் மாலை நேரம். மலையில் மேயச் சென்ற ஆடுகள் எல்லாம் வீட்டிற்குத் திரும்பின. குறும்புக்கார ஆட்டுக்குட்டி மட்டும் பாடிக் கொண்டே தனியாக வந்தது. திடீரென்று ஓர் உறுமல் சத்தம். ஆட்டுக்குட்டி அச்சத்துடன் திரும்பிப் பார்த்தது. மிக அருகில்ஒரு புலி. தப்பி ஓடலாமா? எங்காவது ஒளிந்து கொள்ளலாமா? என்ன செய்வது? ஆட்டுக்குட்டி துணிச்சலுடன்.

“அழகு மலைகுச் செல்லுவேன்
ஆடிப் பாடித்துள்ளுவென்
அருகில் புலியே வந்தாலும் என்
அறிவால் அதனை வெல்லுவேன்” என்று பாடியது.

புலி கேலியாக “ஓ! உன் அறிவால் என்னை வெல்வாயா? உன் அறிவுத் திறமையைக் காட்டு பார்க்கலாம்!” என்றது.

உடனே ஆட்டுக்குட்டி, “நான் உன்னிடம் சில புதிர்களைக் கேட்பேன். நீ சரியான விடை சொல்ல முடியாவிட்டால் என்னை அறிவாளி என்று ஏற்றுக் கொண்டு விட்டுவிட வேண்டும். சரியா!” என்று கேட்டது.

“சரி!” என்று தலையாட்டியது புலி.

“விடிய விடியப் பூந்தோட்டம்
விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்”
அது என்ன?
புலி “திரு திரு” என்று விழித்தது.
“பூந்தோட்டம், வெறுந்தோட்டமா? ஒன்றும்
புரிய வில்லையே! நீயே சொல்” என்றது.

“வானம் விண்மீன்கள்” என்று ஆட்டுக்குட்டி துள்ளிக் கொண்டே கூறியது.

இன்னொரு புதிர் கூறுகிறேன்.

“தின்னப் பழம் பழுக்கும்

தின்னாத காய் காய்க்கும்” - - அது என்ன?

புலி குறுக்கும் நெடுக்குமாக நடந்தது : ஆழ்ந்து சிந்தித்தது: ஆனாலும் அதற்கு விடை தெரியவில்லை,

“வேப்பமரம்” என்று விடையைக் கூறியது ஆட்டுக்குட்டி.

“நீரிலும் இருப்பான் நிலத்திலும் இருப்பான்: வாலோடு பிறப்பான் வாலை இழப்பான் - அவன் யார்? என்றது ஆட்டுக்குட்டி.

இதற்கும் புலிக்கு விடை தெரியவில்லை

“தவளை“ என்று கூறியது ஆட்டுக்குட்டி.

உடனே புலி, “நீ அறிவாளி தான்! போய் வா” என்று பாராட்டி அனுப்பியது.

ஆட்டுக்குட்டி மகிழ்ச்சியுடன். அழகு மலைக்குச் செல்லுவேன்...” என்று பாடிக் கொண்டே சென்றது.

**பயிற்சி**

**I. விடை கூறு:**

1. ஆட்டுக்குட்டி தன் தோழர்களுடன் எப்படியெல்லாம் விளையாடும்?
2. காட்டில் புலியின் நடமாட்டத்தை எப்படி அறியலாம்?
3. ஆட்டுக்குட்டி பாடிய பாடலை இசையுடன் பாடு.
4. ஆட்டுக்குட்டி கூறிய விடுகதைகளில் ஒன்றைக் கூறு.

**II. நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி எழுதுக**

தப்பிக்க புலியிடம் கேள்விகள் கேட்டது.

எதிரே புலியைக் கண்டது

ஆட்டுக்குட்டி விளையாடச் சென்றது.

புலி ஆட்டுக்குட்டியை விட்டுவிட்டது

புலிக்கு விடைகள் தெரியவில்லை.

**III. பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. | ஆட்டுக்குட்டி ____________ அடிவாரத்தில் வாழ்ந்து வந்தது. | மலை, மழை |
| 2. | ஆட்டுகள் _____________ களை உண்ணும் | தலை, தழை |

| | | |
|---|---|---|
| 3. | _______________ யின் உறுமல், சத்தம் கேட்டு ஆட்டுக்குட்டி நடுங்கியது | புலி, புளி |
| 4. | ஆட்டுக்குட்டிக்குத் தப்பிச் செல்ல _____________ தெரியவில்லை | வழி, வலி |

## அலகு– 3 : பொதுக்கட்டுரை

### 1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**முன்னுரை :**

கூடிவாழ்வது மனிதனின் இயல்பு. கூடிவாழ்ந்தால் நன்மைகள் கோடி உண்டு என்பதை அறிந்து ஒன்றுபட்டுக் கூடிவாழ்வோம்.

**இயற்கை தரும் பாடம் :**

தேங்காய் நார் ஒன்றுசேர்ந்து கயிறாக உருப்பெற்றுப் பயன்படுகிறது. வலிமை மிக்க யானைகள் கூடியே வாழ்கின்றன. சாரை சாரையாய் ஊர்ந்து செல்லும் எறும்புக் கூட்டமும், பூக்கள்தோறும் பறந்து சென்று தேனைக் கொண்டு கூடுகளில் சேர்க்கும் தேனீக்களும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

**பழமொழிகளும், கதைகளும்:**

"ஒற்றுமையே பலம்", "கூடித்தொழில்செய்","ஊருடன் கூடிவாழ்", "தேசத்தோடு ஒத்துவாழ்" போன்ற கூற்றுகள் ஒன்றுபட்ட வாழ்வின் நன்மைகளை உயர்த்துகின்றன. "கூடிவிளையாடுபாப்பா" எனக் குழந்தைக்குப் பாரதியார் அறிவுறுத்துகிறார். "நான்கு எருதுகளும் சிங்கமும், புறாக்களும் வேடனும் என்னும் கதைகள் நாம் அறிந்தனவே. அவை போதிக்கும் உண்மை கூடிவாழ்வதால் நன்மை உண்டு என்பதாகும்.

**கூடிவாழ வழி:**

நம் ஒன்றுபட்ட வாழ்வுக்குத் தடைக்கற்கள் சாதியும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் ஆகும். மனிதரை நேசிக்க கற்றுக் கொள்வோம். தீண்டாமைப் பேயை விரட்டுவோம். சமத்துவம், சகோதரத்துவம், என்ற மதிப்பீடுகளைப் போற்றுவோம்.

**முடிவுரை :**

நம்முடைய கருத்து வேறுபாடுகள் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கக் கூடாது.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு— நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்ற பாரதியாரின் அறைகூவலை ஏற்போம். கூடி வாழ்வோம். கோடி நலம் பெறுவோம்.

**2. வாய்மையே வெல்லும்**

**முன்னுரை :**

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்".

- என்பார் வள்ளுவர். உடலை நீரால் தூய்மை செய்வது போல, உள்ளத்தை வாய்மையால் தூய்மை செய்திட வேண்டும் என்கிறார். வாய்மை என்னும் விளக்கால் உள்ளத்தின் அறியாமை இருள் அகலும், அறிவொளி பரவும்.

**வாய்மை விளக்கம்:**

என்றும் நிலையாய் உள்ளதை உரைப்பதே உண்மை. எண்ணம், சொல், செயல் என்னும் மூன்றாலும் தூய்மையைக் கடைப்பிடித்து வாழ்தலே வாய்மைப் பண்பு. உள்ளம் உண்மையின் உறைவிடமாய் அமையும் போது, உதட்டிலிருந்து வெளிவரும் உரையும் உண்மையாக இருக்கும்.

**வாய்மையைப் போற்றுதல்:**

"பிற உயிர்க்குத் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மை" என்பார் வள்ளுவர். உளமறிய ஒருவர் பொய் கூறக் கூடாது. அவ்வாறு கூறினால் அவரது உள்ளமே அவரைச் சுட்டுவிடும். மனச்சான்று விழித்துக் கொண்டு மனிதனை உறங்க விடாது. மனத்தோடு பொருந்திய உண்மையைப் பேசினால் தானம் செய்து புகழ் பெறுபவரை விட, தவம் செய்து நற்கதி அடைபவரை விட வாழ்வில் உயர்நிலைக்குச் செல்லலாம்.

**முடிவுரை:**

உண்மை பேசுவதே உயர்ந்த அறம். அந்த அறத்தைப் போற்றி வாழ்வோம். "பொய்சொல்லலாகாது பாப்பா" எனப் பாரதியார் பாப்பாவுக்கு மட்டும் கூறவில்லை. எல்லோருக்கும் தான் கூறியுள்ளார்.

உண்மையே பேசுக! வாய்மையே வெல்லும்!.

## அலகு -4

## சொற்பொருள் அறிதல்

**அ) இணையான பொருள் தரும் சொல்லை எழுதுக**

**எ.கா**

| | | |
|---|---|---|
| தோழன் | - | நண்பன் |
| ஆதவன் | - | கதிரவன் |
| தந்தை | - | அப்பா |
| தாய் | - | அம்மா |
| ஆறு | - | வழி |
| முகில் | - | மேகம் |

**ஆ) பொருத்தமான சொற்களைக் காலியிடத்தில் நிரப்பிப்படி:**

ஒரு______________ மரத்தின் அடியில் _______________ அணில்

ஒன்று ______________ விளையாடிக் கொண்டிருந்தது.

நான் ______________ அதன் அருகில் சென்றேன்.

என்னைப் பார்த்ததும் அது "கீச்கீச்" என்று கத்திக் கொண்டே ஓடியது.

இ) சொல் ஒன்று : பொருள் இரண்டு. தொடருக்கு எதிரே சரியான பொருளை எடுத்து எழுதுக:

1. வானில் மதி ஒளி வீசியது (_______________)
   கோதை மதி நிறைந்தவள் (அறிவு, சந்திரன்)
2. கரையோரம் படகு நிற்கும் இடம் படகுத்துறை (_________________)
   நாட்டில் தொழில்துறை வளர வேண்டும் (இடம், பிரிவு)

**ஈ) புகழ் பெற்ற நூல் - நூலாசிரியர்**

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் | - | தொல்காப்பியர் |
| திருமுருகாற்றுப்படை | - | நக்கீரர் |
| திருக்குறள் | - | திருவள்ளுவர் |
| ஆத்திச்சூடி | - | ஔவையார் |
| புதிய ஆத்திச்சூடி | - | பாரதியார் |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | - | சீத்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | - | திருத்தக்க தேவர் |
| கம்பராமாயணம் | - | கம்பர் |
| பெரியபுராணம் | - | சேக்கிழார் |
| சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| தேம்பாவணி | - | வீரமாமுனிவர் |
| திருமந்திரம் | - | திருமூலர் |
| இயேசுகாவியம் | - | கவிஞர் கண்ணதாசன் |
| பிரதாப முதலியார் சரித்திரம் | - | வேதநாயகம்பிள்ளை |

## அலகு– 5

**மொழித்திறன் பயிற்சி**

**1. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுதல்**

அச்சம் - பயம்

அரிது - கடினம்

அப்பா - தந்தை

அவசரம் - வேகமாக

ஆழி - கடல்

இல்லம் - வீடு

இதழ் - பத்திரிகை

இரக்கம் - கருணை

ஈன்றாள் - அன்னை, அம்மா, தாய்

உவகை - மகிழ்ச்சி

கதிரவன் - சூரியன்,ஆதவன், ஞாயிறு

கலம் - கப்பல்

திங்கள் - மாதம், சந்திரன்

தோழன் - நண்பன்

ஆறு - வழி, எண்

முகில் - மேகம்

வினா - கேள்வி

சகோதரன் - உடன்பிறந்தவர்

சகோதரி - உடன்பிறந்தவள்

விண்மீன் - நட்சத்திரம்

**2.** செய்யுளை மனப்பாடம் செய்து ஒப்புவித்தல்

**3.** ஒலி நிறுத்தற் குறிகளுடன் கூடிய சொல்லைக் கேட்டு எழுதுதல்

**4.** நகைச்சுவைத் துணுக்குகளையும், சுவரொட்டிகளையும் படித்தல்

**5.** ஆங்கிலப் பகுதியைத் தமிழாக்குதல்.

1. Dog is the most faithful animal
2. Very few people in the world are as great as Mother Tersa
3. Parents love their children
4. Rose is the Most Beautiful flower.
5. The sun gives us heat and light
6. John is stronger than Gopal
7. Kala is senior to all her friends
8. There is no leaf on this tree
9. Raman is the best boy I have ever seen
10. If you work hard, you will score high marks
11. Revenge is not better than forgiveness.
12. Raja is one of the richest men in India
13. Her knoweldge of the world is superior to mine
14. Who gave you these flowers
15. The girls are singing song
16. She is not doing any work today

17.Mumbai is the biggest city of India

18.Kindly lend me your pen

19.We should drink plenty of water every day?

20.We must do simple excercies daily

**6.** வருணனைக் கட்டுரை எழுதச் செய்தல்

அ). அழகிய பூக்கள் நிறைந்த ஒரு தோட்டத்திற்குள் நீ செல்கிறாய். அங்கு நீ காண்பவற்றை விவரித்து கூறுக. எழுதுக.

ஆ) கிரிக்கெட் விளையாட்டரங்கு வருணனை

இ) கடல் வருணனை (ஈ) ஆறு வருணனை (உ) காடு வருணனை

**7.** பெயர்ச்சொல், வினைச்சொல் - சான்று கூறுதல்.

**8.** எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் - விளக்கிக் கூறுதல்

**9.** கடிதம் எழுத கற்பித்தல் (வேண்டுதல், முறையீடு, விண்ணப்பம்)